**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.54/2021**
**Prosecution Witnesses :7**

| | | | |
|---|---|---|---|
| Name | :**டாக்டர். உஷாராணி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **வாசுதேவன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(20.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் கடந்த 2024ம் ஆண்டு பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 04.12.2019ம் தேதி அன்று நான் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது இரவு 8.30 மணியளவில் அழகம்மாள் 30 வயது என்பவர் சிக்சைக்காக வந்தார். நான் அவரை பரிசோதனை செய்தபோதுஅவர் என்னிடம் ஒரு நபரால் இரும்பு ராடால் தலையில் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது சிதைந்த காயம் 5x2 செ.மீ அளவில் இடது Parietal பக்கம் இருந்தது. அதிகமான இரத்தப் போக்கு காணப்பட்டது. அதனால் நான் அவரை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைத்தேன். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்க்கப்பட்டு 07.12.2019ம் தேதி சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இளமாறன் என்பவர் சான்று அளித்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய**

**காயச்சான்று அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

அ.சா.1க்கு ஏற்பட்டகாயமானது கற்குவியலில் விழுந்தாலோ அல்லது படிக்கட்டில் விழுந்தாலோ இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**மறுவிசாரணை.**இல்லை